**சிவகாசி நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**
**சாதாரணக்கூட்டம் எண் .** **நாள் :29 .01.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 சார்வரி வருடம் தை திங்கள் 16 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி,எம்.ஏ.,எம்.பில்.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சிக்கு மாநில உயர் மட்ட குழு (STATE HIGH LEVEL COMMITTEE) மூலமாக நகரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கிராம மற்றும் நகர்புரங்களுக்காக அரசானை எண்-368,நாள்-07.10.2020-ன் படி ரூ.500கோடிக்கு நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசானையின் படி சிவகாசி நகராட்சியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் விதமாக பழுதடைந்த சிறுபாலங்களை புதுபிப்பதற்க்கும் ,உயர் கோபுர மின் விளக்குகளிலும் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதாலும் மற்றும் மின்சார சிக்கனத்தை கருத்தில் கொண்டும்,400 வாட்ஸ் Metal Halide விளக்களை Energy Saver LED விளக்குகளாக மாற்றி பொருத்துவதற்க்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.36.94 இலட்சத்திற்க்கு கீழ்கண்டவாறு பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| Sl.No. | Name of work | Estimate Amount (Rs. In lakhs) |
|---|---|---|
| 1 | Construction of Culvert PKSA Arumugam Road near Vetrivinayagar Kovil | 4.50 |
| 2 | Construction of Culvert PKSA Arumugam Road near Central bank | 7.80 |
| 3 | Construction of Culvert Maruthupandiar Street – 3 Nos. | 1.50 |
| 4 | Construction of Culvert PKN Road, Pallapatti Road near Church | 2.20 |
| 5 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 350 watts LED Light (energy saving) in Municipal Bus Stand | 4.50 |
| 6 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 350 watts LED Light (energy saving) in New Road | 3.00 |
| 7 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in NRKR Road New Road Junction | 1.92 |
| 8 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Gandhi Road Viswanatham Junction | 1.92 |
| 9 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Chairman ASKT Road Kamag Road Junction | 1.92 |
| 10 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Thiruthangal Road Coronation Bus Stop | 1.92 |
| 11 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Police Station Road Srivilliputhur Road Junction | 1.92 |
| 12 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Thiruthangal Road Kamarajar Park | 1.92 |

| | | |
|---|---|---|
| 13 | Replacing the 400 watts metal halide light (High Mast) to 200 watts LED Light (energy saving) in Police Station Road Near Kamarajar Statue | 1.92 |
| | **Total** | **36.94** |

மேற்காணும் பதிமூன்று பணிகளும் அரசாணையின்படி அரசின் நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5813/2021/இ2

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1038

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 01.03.2020ம் தேதிய அன்று மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவின் போது சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில் சிவகாசி நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 50.00 கோடி ரூபாய் அரசால் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (ந.நி.V(1) துறை, அரசாணை (நிலை) எண்.123, நாள்.11.11.2020ன் படி சிவகாசி நகராட்சிக்கு ரூ.50.00 கோடி வழங்குவதற்கும், சிவகாசி நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை தேர்வு செய்ய குழு அமைத்தல் மற்றும் கொள்கை அளவில் ஒப்புதல் (In principle approval) வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
எனவே கீழ்காணும் பணிகளை தேர்வு செய்தும், அதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் நகராட்சி ஆணையர் சிவகாசி ஆகியோர் கொண்ட குழவில் அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ.இ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | <u>**சாலைப் பணிகள்**</u><br>**9.342** கி.மீ. நீளத்தில் **13** எண்ணம் தார்சாலை பணிகள், **15.519** கி.மீ நீளத்தில் **35** எண்ணம் பேவர் பிளாக் சாலை பணிகள் மேற்படி சாலைகள் குடிநீர் திட்ட பணிகள் மூலம் பழுதான சாலைகள் | 3580.00 |
| 2 | <u>**அலஙகார விளக்குகள் அமைத்தல்**</u><br>1) சிவகாசி நகராட்சிக்கு சொந்தமான வேலாயுதம் சாலையில் **50** எண்ணம் சென்டர் மீடியா விளக்குகள்<br>**2)** சிவகாசி நகராட்சிக்கு சொந்தமான பெரியகருப்பன் சாலை முதல் காமாக் சாலை வரை **50** எண்ணம் சென்டர் மீடியா விளக்குகள்<br>**3)** சிவகாசி நகராட்சிக்கு சொந்தமான காந்தி சாலை முதல் வெம்பகோட்டை சந்திப்பு வரை **75** எண்ணம் சென்டர் மீடியா விளக்குகள்<br>**4)** சிவகாசி நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு லாரி வாகனத்துடன் இரும்பு ஏணி **1** எண்ணம் வாஙகுதல் | 150.00 |
| 3 | <u>**நகராட்சி பேருந்து நிலையம் மேம்பாட்டு பணிகள்**</u><br>சிவகாசி நகராட்சி பேருந்து நிலையம் வார்டு ஜி, பிளாக் **18**, சர்வே எண் **1,2** மற்றும் **5**, **1.91** ஏக்கர் நிலப்பரப்பில் **17** எண்ணம் கடைகள், **1** எண்ணம் உணவு விடுதி கட்டும் பணி | 300.00 |

| | | |
|---|---|---|
| 4 | சிவகாசி நகராட்சி பேருந்து நிலையம் வார்டு ஜி, பிளாக் 18, சர்வே எண் 1,2 மற்றும் 5, 1.91 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கு பகுதியில் 2 எண்ணம் இரு சக்கர வாகன காப்பகம் 25 கடைகள் அமைத்தல், 2 எண்ணம் கழிப்பறை கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 330.00 |
| 5 | <u>நடைபாதை மற்றும் சாலை ஓரப் பூங்கா அமைத்தல்</u><br>நகர் முகப்பு பகுதியில் அமைந்துள்ள சிஎன் அண்ணாதுரை சாலை, வார்டு பி, பிளாக் 9, சர்வே எண் 2,3,4,5, மற்றும் காமராஜர் சாலை, வார்டு பி, பிளாக் 9, சர்வே எண் 1 ஆகிய சாலை ஓரங்களில் பொது மக்களுக்கு நடைபாதை (Walkway) மற்றும் சாலை ஓர பூங்கா அமைக்கும் பணிகள் | 100.00 |
| 6 | <u>பூங்காக்கள் அமைக்கும் பணி</u><br>1. “ஜெ” நகர் பூங்கா, வார்டு எப், பிளாக் 4, சர்வே எண் 18/27 A1A1 ல் 1720 ச.மீ<br>2. நடராஜர் காலனி பூங்கா, வார்டு ஜி, பிளாக் 12, நகரபுல எண் 142, 536 ச.மீ<br>3. புது காலனி பூங்கா வார்டு ஏ, பிளாக் எண் 23, நகரபுல எண் 6, 71 52 ச.மீ மற்றும்<br>4. 66 வீட்டு காலனி பூங்கா, வார்டு சி, பிளாக் எண் 11, நகரபுல எண் 139, 1248 ஆகிய இடங்களில் பூங்காக்கள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு திடல் அமைக்கும் பணிகள்<br>5. ரத்தினம் நகர் பூங்கா | 200.00 |
| 7 | **குடிநீர்**<br>வெம்பக்கோட்டை தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து சிவகாசி நீர் உந்தும் நிலையம் வரை குடிநீர் குழாய்கள் மாற்றும் பணி | 340.00 |
| | | **5000.00** |

அலுவலக குறிப்பு: மேற்காணும் பணிகளை தேர்வு குழுவின் ஒப்புதலுடன் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் முழு மான்யத்துடன் செயல்படுத்துவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 1635/2020/இ1
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1039

3. சிவகாசி நகராட்சி, பொது சுகாதார பிரிவு கொரோனா நோய் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி ஆகியோரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணியில் கடந்த 28 வருட காலமாக சிறப்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் "M/s.பாரதாலயா" திருச்சி நிறுவனத்திற்கு சிவகாசி நகராட்சியில் 1.அண்ணாகாலனி, 2.சிவன் கோவில் சன்னதி, 3.பேருந்து நிலையம், 4. பாரதி நகர் ஆகிய பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த நிகழ்வு 1-க்கு ரூ.5,000/- வீதம் நான்கு நிகழ்ச்சிகளுக்கு செலவு தொகை ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலவீனத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.
2. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஆணையரின் முன் அனுமதி பெற்று நிகழ்வு நடைபெற்றதையும் மற்றும் உரிய செலவீனத் தொகையை பொது நிதியின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 0135 / 2021 / எச்1 )**
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1040

4. சிவகாசி நகராட்சி வார்டு எண்-11 பாரதிநகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி சுமார் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. தற்சமயம் பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்துள்ளதால் அதில் உள்ள மும்முனை மின் இணைப்பு மோட்டார் இயக்குவதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. மேற்கண்ட நீர்த்தேக்கத் தொட்டி போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதால் மேற்க்கண்ட நீர்த்தேக்கதொட்டியினை அகற்றிவிட்டு அதில்லுள்ள மும்முனை மின்இணைப்பை அதே தெருவில் தெற்குபக்கம் ஓரமாக இரு இரும்புகம்பி ஊன்றி மின்இணைப்பை மாற்றி அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேசசெலவு ரூ.21,000/க்கு (ரூபாய் இருபத்தி ஓராயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1028,நாள்-29.10.2020படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு மேற்கண்ட பணிக்கு 02.12.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.G.ஜானகிராமன் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2. | திரு.K.பழநிகுமார் | மதிப்பீட்டை விட 4.04% அதிகம் |

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு.G.ஜாணகிராமன் என்பவர் மதிப்பீட்டினைவிட 0.04% குறைவாக தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்யவும் மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்:4078/2020/இ2
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1041

5. சிவகாசி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் புதிய இலகு ரக வாகனம் (TATA ACC) 1 எண்ணம் வாங்கும் பணிக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி பணிகளை மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு தினத்தந்தி நாளிதழுக்கு தொகை ரூ.9,072/-ஐ ( ரூபாய் ஒன்பதாயிரத்து எழுபத்தி இரண்டு மட்டும் ) பட்டியல் எண்.MDU-2021-0005892 நாள். 19.09.2020-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 3605 / 2018 / இ1
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1042

6. சிவகாசி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019-ம் ஆண்டுக்குரிய நகராட்சி அம்மன்கோவில்பட்டி பள்ளி வளாகத்தில் ஆய்வக அறை கட்டும் பணிக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி பணிகளை மாநில அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு EYEDEA brand solutions நாளிதழுக்கு தொகை ரூ.12,600/-ஐ ( ரூபாய் பனிரெண்டாயிரத்து அறுநூறு மட்டும் ) பட்டியல்

எண்.1810 நாள்.05.09.2020-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2275 / 2020 / இ1
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1043

7. சிவகாசி நகராட்சியில் 2019-2020 மற்றும் 2020-2021 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுள்ள திட்டப் பணிகள் மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களுக்கு தொகை ரூ.70,875/-ஐ (ரூபாய் எழுபதாயிரத்து எண்ணூற்றி எழுபத்தைந்து மட்டும்) நகராட்சி பொது நிதியில் செலவு செய்வதற்கும் மற்றும் மேற்படி பணிகள் தொடர்பாக 2020-2021-ம் ஆண்டிற்கு மேற்கொண்டு பத்திரிக்கை விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | விளம்பர நாளிதழின் பெயர் | பட்டியல் எண். | நாள் | தொகை (GST சேர்த்து) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | MDU2021-0007927 | 23.10.2020 | 25,725 |
| 2 | தினமலர் | 103 | 25.10.2020 | 32,550 |
| 3 | தினகரன் (KAL PUBLICATIONS (P) LTD. | 3300246197 | 25.10.2020 | 12,600 |
| மொத்தம் | | | | 70,875 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: / 2020/ இ1
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்: 1044

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.